ADROIT
ADROIT PUBLIC RELATIONS PVT. LTD.
No. 5, Damodara Mudali Street,
Chetput, Chennai - 600 031, India
Phone : 044-28362166, 28362343


| | |
|---|---|
| **Publication** | **Dina Mani** |
| **Date** | **06.03.2019** |
| **Edition** | **Tamil Nadu** |
| **Page No** | **05** |


# 30 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச பொறியியல் கண்காட்சி: சென்னையில் 14-இல் தொடக்கம்

**சென்னை, மார்ச் 5:** சென்னையில் வரும் 14-ஆம் தேதி தொடங்கவுள்ள சர்வதேச பொறியியல் - தொழில்நுட்பக் கண்காட்சியில் 30-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த 130 நிறுவனங்கள் அந்தக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளதாகவும் அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் ரூ.600 கோடி மதிப்பிலான வர்த்தக நடவடிக்கைகளும், முதலீடுகளும் மேற்கொள்ள வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மத்திய தொழில் வர்த்தகத் துறை அமைச்சகம், சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்போடு இஇபிசி இந்தியா (இந்திய பொறியியல் சார் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில்) அமைப்பானது 8-ஆம் ஆண்டாக இந்தக் கண்காட்சியை நடத்துகிறது.

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 16-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள அக்கண்காட்சியில் மின்னியல் சாதனங்கள், புதிய கண்டுபிடிப்புகள், எதிர்கால தொழிலகக் கட்டமைப்புகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இதுதொடர்பாக மாநில சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ் கூறுகையில், 'இந்தியாவிலேயே பொறியியல் சார் ஏற்றுமதியில் தமிழகம்தான் முன்னோடியாக உள்ளது; தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிக்க மாநில அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது' என்றார்.